**டிசம்பர் – 20**

# TNPSC துளிகள்

- பூமியின் நிலப்பகுதியின் மீது அமைந்த ஆழமான பள்ளத்தாக்கானது கிழக்கு அண்டார்டிகாவில் உள்ள டென்மேன் பனிப் பாறையில் கண்டறியப் பட்டுள்ளது.
    - இந்தப் பள்ளத்தாக்கானது 100 கி.மீ நீளம் மற்றும் 20 கி.மீ அகலம் என்ற அளவில் அமைந்துள்ளது.
- இந்திய வர்த்தக தொழில்துறைக் கூட்டமைப்பானது உலகளாவிய விளையாட்டுகள் உச்சி மாநாட்டின் 9வது பதிப்பான "டர்ஃப் 2019 & இந்தியா விளையாட்டு விருதுகள் 2019" என்பதனை தில்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- கான்பூரில் பிரதமர் தலைமையிலான தேசிய கங்கை ஆணையமானது, கங்கை டால்பின் உயிரினங்களைக் காப்பாற்றுவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் வேண்டி முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் குறித்து விவாதித்தது.
- 6வது இந்திய - இந்தோனேசியக் கூட்டு ஆணையக் கூட்டமானது புது தில்லியில் நடத்தப் பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறைக்கு விருதுகள்

- கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களை திறம்பட செயல்படுத்தியதற்காக தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையானது மத்திய அரசிடமிருந்து 13 விருதுகளைப் பெற்றுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம், தேசிய கிராம – நகரத் திட்டம் மற்றும் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா போன்ற திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக மாநிலம், மாவட்டம், பஞ்சாயத்து ஒன்றியம் மற்றும் கிராமப் பஞ்சாயத்து போன்ற பிரிவுகளில் தமிழ்நாடு விருதுகளைப் பெற்றுள்ளது.
- இந்த நிதியாண்டில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையானது 31 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது.

| சிறப்பாக செயல்படுத்திய திட்டம் | விருதுகள் |
|---|---|
| மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 2 தேசிய விருதுகள், தேவக்கோட்டை ஊராட்சி (சிவகங்கை) |
| நீர் தேக்கி வைக்கும் கட்டமைப்புப் பணிகள் | வேலூர் மாவட்டம் |
| தொழிலாளர்களுக்கு குறித்த காலத்தில் ஊதியம் வழங்கல் | திருச்சி (மாவட்ட அளவில் ), புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் (காஞ்சிபுரம் ) |
| பணிகளை விரைந்து சிறப்பாக முடித்தல் | கரூர் |


# தேசியச் செய்திகள்

## ஆயுதங்கள் (திருத்த) மசோதா, 2019

- மத்திய உள்துறை அமைச்சரான அமித் ஷா ஆயுதங்கள் (திருத்த) மசோதா, 2019ஐ அறிமுகப்படுத்தினார். இந்த மசோதாவானது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்ற ப்பட்டது.
- இந்த மசோதாவானது ஆயுதங்கள் சட்டம், 1959ல் திருத்தம் செய்ய முயல்கின்றது.
- இந்த மசோதாவானது தற்போது ஒருவருக்கு அனுமதிக்கப்பட்ட உரிமம் பெற்ற துப்பாக்கிகளின் எண்ணிக்கையை மூன்றிலிருந்து ஒன்றாகக் குறைக்கும் வகையில் திருத்தப் பட்டுள்ளது.
- மேலும் இந்த மசோதாவானது புது வகையான குற்றங்களையும் அறிமுகப் படுத்துகின்றது.

***அம்சங்கள்:***

- துப்பாக்கிகளை வைத்திருப்பதற்கு கட்டாயம் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
- ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமத்தின் காலக்கெடுவானது மூன்று ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக அதிகரிக்கப் படுகின்றது.
- உரிமம் பெறாத துப்பாக்கிகளைத் தடை செய்தல்.
- இந்த மசோதாவானது பின்வரும் புதிய குற்றங்களைச் சேர்க்கின்றது – சிறைத் தண்டனையுடன் கூடிய தண்டனை.
    - காவல் துறை அல்லது ஆயுதப் படையினரிடமிருந்து துப்பாக்கிகளை வலுக் கட்டாயமாகப் பறித்துக் கொள்ளுதல்.
    - கொண்டாட்டத்தின் போது நடத்தப்படும் துப்பாக்கிச் சுடுதலானது மற்றவர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவித்தல்.




## அரசியலமைப்பு (126வது திருத்தம்) மசோதா, 2019

- இந்த மசோதாவானது மக்களவையில் மத்திய சட்ட மற்றும் நீதித் துறை அமைச்சரான திரு. ரவிசங்கர் பிரசாத் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த மசோதாவானது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.
- அரசியலமைப்பானது (பிரிவு 334) மக்களவை மற்றும் மாநிலங்களின் சட்டமன்றங்களில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோருக்கு இடங்களை ஒதுக்குவதற்கும் ஆங்கிலோ - இந்திய சமூகத்தைச்

சேர்ந்தவர்களை நியமனம் செய்வதற்கும் வழிவகை செய்கின்றது.

- இந்த இட ஒதுக்கீட்டு விதிமுறையானது அரசியலமைப்பு இயற்றப்பட்டதிலிருந்து அடுத்த 70 ஆண்டு காலத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. மேலும் இந்த விதிமுறை 2020 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று காலாவதியாக இருக்கின்றது.
- இந்த மசோதாவானது பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டை 2030 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி வரை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க முயல்கின்றது.
- இருந்த போதிலும், இந்த மசோதாவானது ஆங்கிலோ - இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கான இட ஒதுக்கீட்டு விதிமுறையை நீட்டிப்பதற்கு முன்மொழிய வில்லை. இச்சமூகத்தினருக்கான இட ஒதுக்கீட்டு விதிமுறை ஜனவரி 25 ஆம் தேதியுடன் காலாவதியாகின்றது.
- நாட்டில் 296 ஆங்கிலோ - இந்தியர்கள் மட்டுமே உள்ளனர் என்று கூறி மத்திய அரசு இதனை நியாயப் படுத்துகின்றது.

## காவல் துறை பயிற்சி நிறுவனங்களின் தலைவர்களின் 37வது தேசியக் கருத்தரங்கு

- காவல் துறை பயிற்சி நிறுவனங்களின் தலைவர்களின் 37வது தேசியக் கருத்தரங்கானது காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (Bureau of Police Research and Development - BPR&D) புது தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இக்கருத்தரங்கின் கருப்பொருள், “பகிர்வு மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலம் - வளங்களின் உகந்த பயன்பாடு” என்பதாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய அகதிகள் மன்றம்

- சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் முதலாவது உலகளாவிய அகதிகள் மன்றத்தின் கூட்டமானது நடைபெற்றது.
- இது சுவிட்சர்லாந்து அரசுடன் இணைந்து ஐக்கிய நாடுகளின் அகதிகள் நிறுவனத்தினால் (United Nations Refugee Agency - UNHCR) நடத்தப் பட்டது.
- உலகளாவிய அகதிகள் மன்றமானது UNHCRன் ஒரு பகுதியாகும். இது அகதிகளுக்கான உலகளாவிய ஒருங்கிணைப்பு (நெருங்கிய) ஒப்பந்தத்தால் வழி நடத்தப் படுகின்றது.
- UNHCR ஆனது 1950 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### உலகின் முதலாவது திரவ ஹைட்ரஜனால் இயங்கும் போக்குவரத்துக் கப்பல்

- ஜப்பானியப் பொதுப் பன்னாட்டு நிறுவனமானது 'சூசோ பிரண்டியர்' என்ற பெயரைக் கொண்ட கடலில் செல்லும் உலகின் முதலாவது திரவ ஹைட்ரஜனால் இயங்கும் போக்குவரத்துக் கப்பலை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஆஸ்திரேலியாவின் தெற்கு கடற்கரையில் உற்பத்தி செய்யப் படும் மைனஸ் 253°C என்ற அளவுள்ள திரவ ஹைட்ரஜனை ஜப்பானின் கோபிபே நகரத்திற்கு கொண்டுச் சேர்ப்பதற்காக இது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- நீர் மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்துவது போன்ற பல்வேறு வழிகள் உட்பட ஹைட்ரஜனை உற்பத்தி செய்யலாம். பின்னர் அதனைச் சேமித்து மற்றொரு இடத்திற்கு அனுப்பி, அதனை மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்.

## மாநிலச் செய்திகள்

### ஜல்சாதி - ஒடிசா அரசு

- ஒடிசா மாநில முதல்வரான நவீன் பட்நாயக் 'ஜல்சாதி' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது அம்மாநிலத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்கப் படுவதை உறுதி செய்ய இருக்கின்றது.
- நுகர்வோர்கள் மற்றும் பொது சுகாதார பொறியியல் அமைப்பு (PHEO - Public Health Engineering Organisation) அல்லது ஒடிசாவின் நீர்க் கழகம் ஆகியவற்றிற்கு இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படும் 'ஜல்சாதிஸ்' என்று அழைக்கப்படும் மகளிர் தன்னார்வலர்கள் இதற்காக பணி அமர்த்தப் பட்டு இருப்பார்கள்.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### ICC விருதுகள் 2019

- சர்வதேச கிரிக்கெட் மன்றமானது (International Cricket Council - ICC) 2019 ஆம் ஆண்டின் ICC விருதுகளை அறிவித்துள்ளது.
- இது முந்தைய 12 மாதங்களில் சர்வதேச கிரிக்கெட்டில் சிறப்பாகச் செயல்பட்ட வீரர்களை அங்கீகரித்து, அவர்களை கௌரவிப்பதற்கான விளையாட்டு விருதுகளின் தொகுப்பாகும்.

- இந்திய மகளிர் கிரிக்கெட் வீரரான ஸ்மிருதி மந்தனா என்பவர் ICC பெண்கள் ஒருநாள் கிரிக்கெட் போட்டி (சர்வதேச ஒருநாள்) மற்றும் டி20 (இருபது இருபது) ஆகிய இரண்டு பிரிவுகளிலும் ஆண்டின் சிறந்த மகளிர் வீராங்கனையாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இந்த ஆண்டின் டி20 அணிப் பட்டியலில் உள்ள இந்தியாவைச் சேர்ந்த பிற சிறந்த மகளிர் வீராங்கனைகள் தீப்தி சர்மா மற்றும் ராதா யாதவ் ஆகியோர் ஆவர்.
- இந்த ஆண்டின் ஒருநாள் கிரிக்கெட் அணிப் பட்டியலில் ஷிகா பாண்டே, ஜுலான் கோஸ்வாமி மற்றும் பூனம் யாதவ் ஆகியோர் இந்தியாவைச் சேர்ந்த பிற சிறந்த வீராங்கனைகளாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

## PRSI தேசிய விருதுகள் – NLCIL

- NLC இந்திய லிமிடெட் நிறுவனமானது (NLC India Ltd - NLCIL) இந்தியப் பொதுத் தகவல் தொடர்புச் சங்கத்தினால் (Public Relations Society of India - PRSI) நிறுவப்பட்ட இரண்டு தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது.
- NLCIL ஆனது நாட்டின் சிறந்த நிறுவனமாக பின்வரும் இரண்டு அம்சங்களின் அடிப்படையில் தேர்வு செய்யப் பட்டுள்ளது.
  - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை (Right to Information Act - RTI) செயல்படுத்துதல்
  - பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை (Corporate Social Responsibility - CSR).
- ஹைதராபாத்தில் நடைபெற்ற 41வது அகில இந்தியப் பொதுத் தகவல் தொடர்பு மாநாட்டில் இந்த விருதுகள் வழங்கப் பட்டன.

## 16வது ஆரஞ்சு விழா

- மாநில அளவிலான ஆரஞ்சு விழாவின் 16வது பதிப்பானது மணிப்பூரில் தொடங்கியது.
- இந்த விழாவானது ஆண்டுதோறும் வடகிழக்கு மன்றத்தின் நிதியுதவியுடன் மணிப்பூர் அரசினால் நடத்தப் படுகின்றது.
- இது ஆரஞ்சு பழத்தை ஊக்குவிப்பதையும் அதனை விளைவிக்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தான்சேன் சமரோஹ் 2019

- புகழ்பெற்ற பாரம்பரிய இசை விழாவின் 95வது பதிப்பு ‘தான்சேன் சமரோஹ் 2019’ ஆனது மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் தொடங்கியது.
- இந்த விழாவானது 1924 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு வருடாந்திரக் கொண்டாட்டமாகும்.
- இது 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற இந்தியப் பாரம்பரிய இசையமைப்பாளர், இசைக் கலைஞர் மற்றும் பாடகரான மியான் தான்சேனின் நினைவாக கொண்டாடப் படுகின்றது.




## சாகித்ய அகாடமி விருதுகள் 2019

- சமீபத்தில், மத்தியக் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள சாகித்ய நிறுவனமானது 2019 ஆம் ஆண்டிற்கான தனது வருடாந்திர சாகித்ய அகாடமி விருதுகளை அறிவித்துள்ளது. இந்த விருதானது இந்த வருடம் 23 மொழிகளில் உள்ள படைப்புகளுக்கு வழங்கப் பட்டு இருக்கின்றது.
- தமிழ் எழுத்தாளரான சோ. தர்மன் தனது சூல் என்ற புதினத்திற்காக 2019 ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருதினை வென்றுள்ளார்.
- இந்த நாவலானது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள உருளைக்குடிஎன்ற கிராமத்தில் வாழும் சமூகத்தின் கீழ்மட்ட மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கின்றது.

*பற்றி*

- 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சாகித்ய அகாடமி விருதானது ஒரு இலக்கிய கௌரவ விருதாகும்.
- 24 இந்தியப் பெரும் மொழிகளில் (அட்டவணையிடப்பட்ட 22 மொழிகள் மற்றும் ஆங்கிலம் & ராஜஸ்தானி) வெளியிடப்பட்டுள்ள மிகச் சிறந்த இலக்கியம் சார்ந்த புத்தகங்களுக்கு இந்த விருது வழங்கப் படுகின்றது.
- சாகித்ய அகாடமி விருதானது ஞானபீட விருதுக்குப் பிறகு இந்திய அரசால் வழங்கப்படும் இரண்டாவது மிக உயர்ந்த இலக்கிய கௌரவ விருதாகும்.

### Sahitya Akademi Award 2019

| Language | Title and Genre | Name of the Author |
|---|---|---|
| Assamese | Chanakya (Novel) | Joysree Goswami Mahanta |
| Bengali | Ghumer Darja Thele (Essays) | Chinmoy Guha |
| Bodo | Akhai Athumniphrai (Poetry) | Phukan Ch. Basumatary |
| Dogri | Bandralta Darpan (Essays) | Om Sharma Jandriari |
| English | An Era of Darkness (Non-Fiction) | Shashi Tharoor |
| Gujarati | Mojma Revu Re (Essays) | Ratilal Borisagar |
| Hindi | Chheelate Hue Apne Ko (Poetry) | Nand Kishore Acharya |
| Kannada | Kudi Esaru (Autobiography) | Vijaya |
| Kashmiri | Akh Yaad Akh Qayamat (Short Stori | Abdul Ahad Hajini |
| Konkani | The Words (Poetry) | Nilba A. Khandekar |
| Maithili | Jingik Oriaon Karait (Poetry) | Kumar Manish Arvind |
| Malayalam | Achan Piranna Veedu (Poetry) | V. Madhusoodanan Nair |

### Sahitya Akademi Award 2019

| Language | Title and Genre | Name of the Author |
|---|---|---|
| Manipuri | Ei Amadi Adungeigi Eethat (Novel) | L. Birmangol Singh (Beryl Thanga) |
| Marathi | Kadachit Ajoonahi (Poetry) | Anuradha Patil |
| Odia | Bhaswati (Short Stories) | Tarun Kanti Mishra |
| Punjabi | Antheen (Short Stories) | Kirpal Kazak |
| Rajasthani | Bareek Baat (Short Stories) | Ramsawroop Kisan |
| Sanskrit | Prajnachakshusham (Poetry) | Penna Madhusudan |
| Santali | Sisirjali (Short Stories) | Kali Charan Hembram |
| Sindhi | Jeejal (Short Stories) | Ishwar Moorjani |
| Tamil | Sool (Novel) | Cho. Dharman |
| Telugu | Septabhoomi (Novel) | Bandi Narayana Swamy |
| Urdu | Sawaneh-E-Sir Syed: Ek Bazdeed (Biography) | Shafey Kidwai |

# முக்கிய தினங்கள்

## கோவா விடுதலை தினம் – 2019, டிசம்பர் 19

- 1961 ஆம் ஆண்டில் போர்ச்சுக்கீசியர்களிடமிருந்து கோவா மாநிலத்தை விடுதலை அடையச் செய்த இந்திய ஆயுதப் படைகளை கௌரவிப்பதற்காக இத்தினமானது கொண்டாடப் படுகின்றது.
- 'விஜய் நடவடிக்கையானது' (1961) கோவாவை 451 ஆண்டுகள் ஆட்சி செய்த போர்த்துகீசியர்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.
- 1987 ஆம் ஆண்டு மே 30 அன்று கோவாவிற்கு மாநில அந்தஸ்து வழங்கப் பட்டது.

# இதரச் செய்திகள்

## பெல்ஜியத்தின் ஆல்ஸ்ட் திருவிழா

- யுனெஸ்கோ அமைப்பானது பெல்ஜியத்தின் 'ஆல்ஸ்ட் திருவிழாவை' தனது மனிதநேயத்தின் புலப்படாத கலாச்சார பாரம்பரியப் பட்டியலில் இருந்து நீக்கி உள்ளது.
- இந்தத் திருவிழாவானது 2010 ஆம் ஆண்டில் அந்த அமைப்பின் புலப்படாத கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- ஆல்ஸ்ட் திருவிழாவானது ஆண்டுதோறும் பெல்ஜியத்தில் உள்ள ஒரு நகரமான ஆல்ஸ்டில் நடத்தப் படுகின்றது.
- இது யுனெஸ்கோ அமைப்பால் மனிதநேயத்தின் வாய்வழி மற்றும் புலப்படாத பாரம்பரியத்தின் தலை சிறந்தத் திருவிழாவாக அங்கீகரிக்கப் பட்டது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★